**Date:** 10.07.2026

**MCOP. No.** 99 /2024

**PW:** 1

**Name:** **நாகலிங்கம்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.**

**2ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

விபத்து நடந்த ரோடானது திருப்பத்தூர் - சிங்கம்புணரி செல்லும் சாலையாகும். நான் திருப்பத்தூரிலிருந்து சிங்கம்புணரிக்கு இருசக்கரவாகனத்தை ஒட்டிச் சென்றேன். அந்த ரோடு இரண்டு வாகனங்கள் செல்லும் பெரிய சாலையாகும். என் மீது மோதியதாக சொல்லப்படும் வாகனம் எனக்கு பின்னால் வந்தது. விபத்து நடந்த ரோட்டில் நான் தான் பின்னால் வாகனத்தை கவனிக்காமல் தவறான பாதைக்கு சென்று 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. விபத்து என்னுடைய கவனக்குறைவால் ஏற்பட்டதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. ம.சா.3 மாதிரி வரைபடத்தில் கண்டபடி தான் விபத்து நடந்தது என்று சொன்னால் சரிதான். நான் இருசக்கரவாகனத்தில் ரோட்டின் இடது புறம் செல்லாமல் ரோட்டின் மையப்பகுதியில் சென்றதால் தான் விபத்து நடந்ததாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரித்தி மருத்துவமனையில் விடுவித்தபிறகு நாளது தேதி வரை நான் தொடர் சிகிச்சை மேற்கொண்டதாக ஆவணம் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ ஆவணங்கள் சம்மந்தப்பட்ட மருத்துவமனை நிர்வாகத்தினரை விசாரித்தால் தெரிய வரும் என்றால் சரிதான், நான் அசல் ஆவணங்களை கொடுத்துள்ளேன். எனது தொழில் வருமானத்தைக் காட்டக்ககூடிய ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தின் மூலம் எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதரண காயங்கள் என்றும் விபத்தினால் வருமான இழப்பு மற்றும் நிரந்தர ஊனம் ஏற்படவில்லை என்றும் அடிப்படை ஆதாரமின்றி பல்வேறு தலைப்புகளின் கீழ் இழப்பீடு அதிகமாக கோருகிறேன் என்றால் சரியல்ல.

(Sd.S.Mohana Ramya)

**தலைமைக் குற்றவியல் நடுவர்,**

**சிவகங்கை.**